

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் கொப்பனாப்பட்டியில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுகூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் முகமது இலியாஸ் சாதனை விளக்க உரையாற்றினார். உடன் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் துணை தலைவர்கள், பாக முகவர்கள், பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.



அரியலூர் சட்டமன்றத் தொகுதி, அரியலூர் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில், இராயம்புரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நினைவு கொடிக்கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்து நினைவு கல்வெட்டையும் திறந்து வைத்து சிறப்பித்தார்கள். உடன் அரியலூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் கோ.அறிவழகன் உள்ளிட்ட மாநில,மாவட்ட,ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன் ஒருங்கிணைப்பில் "தளபதி இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு "இரத்த தானம் வழங்கும் முகாமை மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இம்முகாமில் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பி.நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், அ.தமிழ்மறை, நா.முருகவேல், தமிழ்செல்வன், இரா.மணிகண்டன், நோயல் செல்வம், ஆடிட்டர் வெ.சசிகுமார், ச.கார்த்திகேயன், சரஸ்வதி புஷ்பராஜ், பகுதிச் செயலாளர்கள் சிங்கை மு.சிவா, எஸ்.எம்.சாமி, துரை.செந்தமிழ்ச் செல்வன், மா.நாகராஜ், இரா.சேரலாதன், கோவை லோகு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம்,இலக்கியம்பட்டி ஊராட்சி பகுதியில் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் சாலை பணிகள் மேற்கொள்வது குறித்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ.மணி எம்.பி. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட வசதியை உடனடியாக செய்து தருவதாக உறுதி அளித்தார். இந்த நிகழ்வில் தர்மபுரி மேற்கு ஒன்றியச் செயலாளர் டி.எல்.காவேரி,ஏ.எஸ்.சண்முகம், மாவட்ட துணைச் செயலாளர் ஆறுமுகம், ஐ.டி.விங் எம்.பி.கௌதம், எஸ்.உதயசூரியன், ஈஸ்வர், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜகோபால்,கௌதமன், வினோத்குமார்,ஒன்றிய நிர்வாகிகள் செல்வராஜ், சதீஷ்குமார், தண்டபாணி உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

### தனது டெல்லி எஜமானர்களைக் காப்பாற்ற தி.மு.க. அரசின் மீது அவதூறை அள்ளி வீசி

# தரங்கெட்ட தறுதலை மொழியில் பா.ஜ.க. வின் தகவல்களை அறிக்கையாக வெளியிடுகிறார் தொடைநடுங்கி பழனிசாமி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, மே 18 -

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, எடப்பாடி பழனிசாமிக்கு விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

பொழுது விடிந்தால் தி.மு.க. அரசுக்கு எதிராக எந்த அவதூறைப் பரப்பலாம் எனப் பித்தாலாட்ட அரசியல் செய்வதையே முழுநேரப் பணியாகச் செய்து கொண்டிருக்கிறார் பித்தலாட்ட பழனிசாமி.

கல்வி உரிமைச் சட்டத்தின் படி தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்க வேண்டிய 617 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்கு ஒதுக்காமல் அராஜகம் செய்து கொண்டிருக்கும் தனது டெல்லி எசமானர்களைக் காப்பாற்ற தி.மு.க. அரசின் மீது அவதூறை அள்ளி வீசியிருக்கி றார்.

தமிழ்நாட்டு மாணவர்களின் நலனைக் காப்பதில் திராவிட மாடல் அரசும் தமிழ்நாடு முதலமைச்சரும் எடுத்துவரும் நடவடிக்கைகளினால் பள்ளிக் கல்வியில் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் செயல்திறனை அண்மையில் வெளியான பொதுத் தேர்வு முடிவுகளின் தேர்ச்சி விகிதம் சொல்லும்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் பார்த்து பார்த்து செய்யும் திட்டங்களால் இன்றைக்கு அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 74 விழுக்காடாக உயர்ந்து வரலாற்றுச் சாதனைப் படைக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 96 விழுக்காட்டைத் தொட்டுச் சாதனைப் படைக்கப்பட்டிருக்கிறது.



**வன்மத்துடன் செயல்படும் ஒன்றிய அரசு!**

இந்தச் சாதனைகள் எல்லாம் தமிழ்நாட்டின் மீது வன்மத்துடனும் வயிற்றெரிச்சலுடனும் செயல்படும் தமிழர் விரோத ஒன்றிய அரசுக்கு எரிச்சலூட்டுவதில் ஆச்சரியமில்லை. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல் மும்மொழிக்கொள்கையை ஏற்றால் தான் தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய 2152 கோடி ரூபாயை ஒதுக்குவோம் என மிரட்டியது ஒன்றிய அரசு, மிரட்டலுக்கு அஞ்சி அடிபணிய இது ஒன்றும் மானங்கெட்ட அடிமை அ.தி.மு.க. ஆட்சி அல்ல, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசு, அந்தத் தொகையையும் மாநில அரசே ஏற்கும் என அறிவித்து மாணவர்களின் கல்வி உரிமையைக் காத்து நின்றது.

தமிழ்நாட்டிற்கு எப்படியாவது நெருக்கடியைத் தந்து தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கனவை சிதைக்க வேண்டும் எனும் நோக்கத்தோடு கல்வி உரிமைச் சட்டத்தின் படி தனியார் பள்ளிகளுக்கு வழங்க வேண்டிய 617 கோடி ரூபாயை தராமல் இழுத்தடித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு, இது குறித்துப் பல்வேறு நிலைகளில் வலியுறுத்திய போதும் தலைமைச் செயலாளர் மூலம் கடிதம் அளித்துள்ள போதும் அமைதிக் காத்து தனது தமிழ்நாட்டிற்கு எதிரான தனது சதியை நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்த ஆதிக்கத்தைக் கேள்வி கேட்க துப்பில்லாத பா.ஜ.க.வின் எடுபிடி எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டு அரசைக் குற்றம் சுமத்தி அவதூறு பேசியிருக்கிறார்.

தரங்கெட்ட தறுதலை மொழியில் பச்சைப் பொய்களை அறிக்கையாக வெளியிட்டால் அவை உண்மையாகிவிடாது என்பதை அறியாமல் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் எனும் பொறுப்பிற்குக் கொஞ்சமும் தகுதியற்ற முறையில் பா.ஜ.க.வின் வாட்சப் யூனிவர்சிட்டி தகவல்களை அறிக்கையாக வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார் தொடைநடுங்கி பழனிசாமி!

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறைக்கு வரலாற்றில் இல்லாத வகையில் நிதியை ஒதுக்கி சாதனைப் படைத்திருக்கிறது.

தமிழ்நாட்டிற்குரிய கல்வி நிதியை ஒதுக்காமல் மாணவர்களின் கல்வி உரிமையைச் சிதைக்கத் துடிக்கும் தனது டெல்லி எஜமானர்களைக் கேள்விக் கேட்க முடியாமல் தொடை நடுங்கிக் கிடக்கும் துரோகி பழனிசாமிக்குத் துணிவிருந்தால், உண்மையில் மாணவர்களின் நலனில் அக்கறை இருந்தால் ஒன்றிய அரசை நோக்கி கேள்வி கேட்கட்டும்.

"அமைச்சர் பெயர் முக்கியமல்ல, செயல்தான் முக்கியம்!" எனத் தனது ஆட்சியில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் பெயர் கூடத் தெரியாமல்தான் விளையாட்டுத் துறை செயல்பட்டது என ஒத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி!

இன்றைக்கு விளையாட்டுத் துறையில் இந்தியாவை அல்ல, உலகத்தையே ஈர்க்கிற வகையில் புகழ்பெற்றிருக்கிறது தமிழ்நாடு. இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுமேம்பாட்டுத் துறைக்கு 2021-2022 ஆம் ஆண்டில் 225.62 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்ட நிதி ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக உயர்ந்து நடப்பு ஆண்டிற்கு 572 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இதன்மூலம் விளையாட்டுத் துறையின் உட்கட்டமைப்பை வலுவாக்கி தமிழ்நாட்டு இளைஞர்களின் திறனை உலகத் தரத்திற்கு வளர்த்து வருகிறது திராவிட மாடல் அரசு.

விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25 லட்சம் ஊக்கத் தொகையை ரூ.30 லட்சமாக உயர்த்தியதோடு, இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிற பயனாளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்த்தப்பட்டு இருக்கிறது.

இன்றைக்குத் தமிழ்நாட்டின் இளைஞர்கள் உலகளவில் பல்வேறு பதக்கங்களை ஆண்டுதோறும் வாங்கிக் குவித்திருக்கி றார்கள் என்றால் துணை முதலமைச்சரின் தலைமையில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உதவிகளும் உயர்தரத்துடன் வலுப்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளும் தான் காரணம்.

இன்றைக்கு உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியாவிலேயே மிகச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழ்நாடே விளங்குகிறது.

இச்சாதனைகளால்தான் இந்திய தொழில் கூட்டமைப்புச் சார்பில் 2023ம் ஆண்டுக்கான விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு இளைஞர்களின் நலனில் அக்கறை இல்லாமல் சீர்கெட்ட ஆட்சி நடத்திய பழனிசாமி விளையாட்டு மேம்பாட்டுத் துறையைப் பற்றியெல்லாம் பேசலாமா?

தனது ஆட்சியையே தமிழ்நாட்டு உரிமைகளைப் பா.ஜ.க.விடம் அடகு வைக்கும் அடிமை விளையாட்டாக நடத்திய துரோகி பழனிசாமியின் பித்தலாட்டங்கள் ஒரு நாளும் மக்களிடம் வெற்றியடையாது.

பா.ஜ.க.வின் அடிமைகளிலேயே தான் தான் சிறந்த அடிமை எனக் காட்டுவதற்காகப் பழனிசாமி நடத்தும் இந்தக் கோமாளித் தனங்களைக் கேலிக் கூத்துகளாகத்தான் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கி றார்கள். 2026 தேர்தலில் மற்றுமொரு படுதோல்வியைப் பரிசாகத் தந்து பழனிசாமியின் பித்தலாட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை & கீரனூர் ஹியுமினிட்டி பவுண்டேசன் இணைந்து அன்னவாசல் வடக்கு ஒன்றியம் நார்த்தாமலை சமுதாயக் கூடத்தில் நடத்திய 'மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்' நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையேற்று தொடங்கி வைத்தார். 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்ற இந்த முகாமில் 300 நபர்களுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர். 200 நபர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டன. நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.குறிஞ்சிவாணன், எழில் ராஜா, விராலிமலை தமிழினியன், ஆர்ஆர்.எஸ்.எம்.ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,ஹியுமினிட்டி பவுண்டேசன் நிறுவனர் பொறியாளர் க.சுரேஷ் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் பங்கேற்றனர்.

# காஞ்சிபுரம் வடக்கு, சென்னை தெற்கு, புதுக்கோட்டை தெற்கு, சேலம் கிழக்கு ஆகிய மாவட்டத்திற்கான

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.டி. சண்முகம்;

சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத்;

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சீனி. பழனியப்பன்;

சேலம் கிழக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஷேக்மொய்தீன்;

ஆகியோர் மறைவெய்திய காரணத்தால், மேற்கண்ட மாவட்டத்திற்கான பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்தந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச்செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### கரூர் மாவட்டத்தில்

# 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகை!

### மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்!

*கரூர், மே19-*

*கரூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஊக்கத்தொகை வழங்கினார்.*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக மதிப்பெண் பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகையினை கரூர் மாவட்ட கழக செயலாளர், கரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வழங்கினார்.*

*498 மதிப்பெண்கள் பெற்ற மாணவி வி.இந்துஜா, 495 மதிப்பெண்கள் பெற்ற மாணவச் செல்வங்கள் ஜி.பவித்ரா, என்.எஸ்.தீபனா ஸ்ரீ, பி.தீபதர்ஷினி, பி.பிரியதர்ஷினி, கே. சபீதா, பி.எஸ்.சர்வேஸ்வரன், பி.எஸ்.தர்ஷனா, எஸ். தர்ஷினி ஸ்ரீ ஆகியோரையும், 494 மதிப்பெண்கள் பெற்ற மாணவச் செல்வங்கள் கே.தீபனா, ஆர். சுதிக்ஷா, எஸ். ஆதிசிவன், எஸ். அர்ச்சனா, எம். பி.செல்வதமிழ், எஸ். ஸ்ரீகவி, எம். ஹரிஹரசுதன் எம். தனவர்ஷிணி ஆகியோரையும், 491 மதிப்பெண்கள் பெற்ற எம்.பாலாஜி, 490 மதிப்பெண்கள் பெற்ற எம்.எஸ்.அப்ரா யாஸ்மின், 487 மதிப்பெண்கள் பெற்ற எம். அஹீனா, எம். அக்சயஸ்ரீ, 484 மதிப்பெண்கள் எஸ். பவித்ரா ஆகியோருக்கு வி.செந்தில் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.*

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டம், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சி.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பூம்புகார் சின்னசாமி, மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.பி.வைத்தியலிங்கம் மற்றும் அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, ஓரப்பாட்சியூர் கிளையைச் சேர்ந்த லோகநாதன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 17.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.